TNPSC குரூப் 4 2026 – 6574 காலிப்பணியிடங்கள், தேர்வுத் தேதி, தகுதி, தேர்வு முறை, விண்ணப்பிக்கும் முறை

புதுப்பிக்கப்பட்டது: 05-11-2026 · https://www.shanmugamiasacademy.in/tnpsc-group-4

புதிய அறிவிப்பு (05-11-2026): அரசாணை (நிலை) எண் 68, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 30-10-2026 மூலம் அனைத்துப் பிரிவினருக்கும் வயது உச்ச வரம்பு 5 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் குரூப் 4 விண்ணப்பக் கடைசி நாள் **08-11-2026 இரவு 11.59** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது (TNPSC பத்திரிகைச் செய்தி எண் 127/2026, நாள் 04-11-2026; பிற்சேர்க்கை 11B/2026). எழுத்துத் தேர்வுத் தேதியில் (10-01-2027) மாற்றம் இல்லை. திருத்திய வயது வரம்பு கீழே வயது வரம்பு பகுதியில்.

TNPSC குரூப் 4 (Combined Civil Services Examination–IV, Group IV Services) 2026 அறிவிக்கை எண் 11/2026 (விளம்பர எண் 747, நாள் 06-10-2026) வெளியாகியுள்ளது. மொத்தம் **6574 காலிப்பணியிடங்கள்** (46 பதவிகள்). எழுத்துத் தேர்வு **10-01-2027 (ஞாயிறு) காலை 9.30 – 12.30**. இணையவழியில் விண்ணப்பிக்கக் கடைசி நாள் **08-11-2026 (இரவு 11.59)** – நீட்டிக்கப்பட்டது.

இந்தப் பக்கம் TNPSC அதிகாரப்பூர்வ அறிவிக்கையிலிருந்து தொகுக்கப்பட்டது; ஒவ்வொரு புதிய அறிவிப்புக்கும் புதுப்பிக்கப்படும். ஐயம் ஏற்பட்டால் அறிவிக்கையின் ஆங்கிலப் பதிப்பே இறுதியானது. இறுதி முடிவுகளுக்கு tnpsc.gov.in பார்க்கவும்.

முக்கியத் தேதிகள் (Important Dates)

நிகழ்வு	தேதி
அறிவிக்கை (11/2026, விளம்பர எண் 747)	06-10-2026
இணையவழி விண்ணப்பம் தொடக்கம்	06-10-2026
விண்ணப்பக் கடைசி நாள்	**08-11-2026 (இரவு 11.59)** – நீட்டிக்கப்பட்டது (முன்பு 05-11-2026; TNPSC பத்திரிகைச் செய்தி எண் 127/2026, 04-11-2026)
கட்டணம் செலுத்தக் கடைசி நாள்	08-11-2026
திருத்தச் சாளரம் (Application Correction Window)	09-11-2026 முதல் 11-11-2026 வரை (TNPSC பத்திரிகைச் செய்தி 127/2026)
ஹால் டிக்கெட்	tnpscexams.in-இல் பதிவிறக்கம் (தபாலில் வராது)
எழுத்துத் தேர்வு	**10-01-2027, காலை 9.30 – 12.30**
உத்தேச விடைக்குறிப்பு (Tentative key)	தேர்வுக்குப் பின் 6 வேலை நாட்களுக்குள் tnpsc.gov.in-இல்

காலிப்பணியிடங்கள் (Vacancies) – 6574

முக்கியப் பதவிகள் வாரியான சுருக்கம் (அறிவிக்கையின் பதவிக் குறியீடுகள் அடிப்படையில் கூட்டப்பட்டது):

பதவி	பதவிக் குறியீடு (Post Code)	காலியிடங்கள்
கிராம நிர்வாக அலுவலர் (VAO)	2025	**291**
இளநிலை உதவியாளர் (Junior Assistant) – Security, Non-Security, Accounts உட்பட அனைத்துத் துறை / நிறுவனங்கள்	2400, 2600, 4600, 3842, 3840, 3512, 3851, 3521, 3788, 3816, 3520, 3321, 3848	**3737**
தட்டச்சர் (Typist)	2200, 4200, 3834, 3846, 3844, 3852, 3817	**1572**
சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III (Steno Typist Grade III)	2300, 4300, 3837, 3838, 3847, 3672, 3845	**376**
Bill Collector	2500, 3214	**97**
Tax Collector	3854	**107**
வருவாய் உதவியாளர் (Revenue Assistant)	3843	**96**
Personal Clerk	3841	**60**
இளநிலை நிர்வாக உதவியாளர் (Junior Administrative Assistant, Computer Operator உட்பட)	3835, 3836	**55**
செயல் அலுவலர் நிலை IV (Executive Officer Grade IV) – இந்து சமய அறநிலையத் துறை	1655	**46**
வனக் காவலர் (Forest Watcher)	3319	**40**
பிற பதவிகள் (Shorthand Typist, Junior Assistant cum Typist, Junior Inspector of Co-operative Societies, Record Clerk, Laboratory Assistant, Senior Laboratory Assistant, Sales Assistant, Telephone Operator, Forest Guard with Driving Licence)	3804, 3853, 3822, 1095, 3839, 3746, 3103, 3806, 3318	**97**
மொத்தம் (46 பதவிகள்)		**6574**

அதிக இடங்கள் உள்ள தனிப் பதவி: இளநிலை உதவியாளர் (Non Security), தமிழ்நாடு அமைச்சுப் பணி (Post Code 2600) – 2610. அறிவிக்கப்பட்ட காலியிட எண்ணிக்கை தற்காலிகமானது; கலந்தாய்வு தொடங்கும் முன் மாறலாம். துறை / அலகு வாரியான பகிர்வு பின்னர் அறிவிக்கப்படும்.

கல்வித் தகுதி (Educational Qualification)

- VAO, பெரும்பாலான இளநிலை உதவியாளர், Bill Collector, Tax Collector, வருவாய் உதவியாளர், வனக் காவலர் போன்ற பதவிகளுக்கு: **குறைந்தபட்சப் பொதுக் கல்வித் தகுதி – தமிழ்நாடு SSLC (10ஆம் வகுப்பு) தேர்ச்சி**. தமிழ்நாடு திறந்தநிலைப் பள்ளி வாரியம் நடத்தும் 10ஆம் வகுப்புத் தேர்ச்சியும் SSLC-க்குச் சமமாகக் கருதப்படும்.
- சில நிறுவனப் பதவிகளுக்குப் பட்டம் தேவை – எ.கா. இளநிலை உதவியாளர் (Accounts), Tamil Nadu Power Distribution Corporation (3848) – B.Com.; Sales Assistant (3806) – ஏதேனும் ஒரு பட்டம்; Steno Typist, CMDA (3672) – பட்டம் (10+2+3).
- Laboratory Assistant, Senior Laboratory Assistant, Typist (3817), ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக் காப்பாளர் (Forest Guard with Driving Licence) – மேல்நிலைக் கல்வி (+2) தேவை (ஆய்வகப் பதவிகளுக்கும் வனக் காப்பாளர் பதவிக்கும் குறிப்பிட்ட அறிவியல் பாடங்களுடன்).
- தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிகளுக்கு: அரசுத் தொழில்நுட்பத் தேர்வில் தட்டச்சு (Steno-வுக்குச் சுருக்கெழுத்தும்) – ஒவ்வொரு பதவிக்கும் குறிப்பிட்ட நிலையில் (Grade) – தேர்ச்சி; இவற்றில் பெரும்பாலான பதவிகளுக்குக் கணினி அலுவலகத் தானியக்கச் சான்றிதழும் (Certificate Course in Computer on Office Automation) தேவை. சில பதவிகளுக்கு இந்தக் கணினிச் சான்றிதழை நியமனத்துக்குப் பின் தகுதிகாண் பருவத்துக்குள் / 2 ஆண்டுகளுக்குள் பெறலாம்.
- அனைத்துத் தகுதிகளும் **அறிவிக்கை நாளான 06-10-2026 அன்று** பெற்றிருக்க வேண்டும். தமிழில் போதிய அறிவு கட்டாயம் (SSLC / HSC / பட்டத்தில் தமிழ் ஒரு மொழிப்பாடம், அல்லது தமிழ் வழிக் கல்வி, அல்லது TNPSC இரண்டாம் நிலை மொழித் தேர்வு – தமிழ்).
- ஒவ்வொரு பதவிக்குமான முழுத் தகுதியை அறிவிக்கையின் பத்தி 4.2-இல் பார்க்கவும்.

வயது வரம்பு (01-07-2026 அன்று) – திருத்தியது (+5 ஆண்டு)

அரசாணை (நிலை) எண் 68, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 30-10-2026 / பிற்சேர்க்கை 11B/2026-இன்படி அனைத்துப் பிரிவினருக்கும் அதிகபட்ச வயது வரம்பு 5 ஆண்டுகள் உயர்த்தப்பட்டுள்ளது (+5 ஆண்டு). கீழே உள்ள அட்டவணை அறிவிக்கை 11/2026 பத்தி 4.1 அட்டவணையின் ஒவ்வொரு அதிகபட்ச வயதுடனும் 5 ஆண்டுகள் கூட்டித் தரப்பட்டது; அடைப்பில் அறிவிக்கையில் இருந்த பழைய வரம்பு. குறைந்தபட்ச வயதில் மாற்றம் இல்லை. "அதிகபட்சம் 35" என்றால் 01-07-2026 அன்று 35 வயது நிறைவடைந்திருக்கக் கூடாது.

பதவி (பதவிக் குறியீடு)	குறைந்தபட்ச வயது	பிற வகுப்பினர் (Others) – அதிகபட்சம்	BC(OBCM), BCM, MBC/DC – அதிகபட்சம்	SC, SC(A), ST – அதிகபட்சம்
கிராம நிர்வாக அலுவலர் – VAO (2025)	21	**35** (அறிவிக்கை: 30)	**45** (அறிவிக்கை: 40)	**45** (அறிவிக்கை: 40)
இளநிலை உதவியாளர் (2400, 2600, 4600, 3842, 3840, 3512, 3851), Bill Collector (2500, 3214), வருவாய் உதவியாளர் (3843), Tax Collector (3854), இளநிலை நிர்வாக உதவியாளர் (3835, 3836), இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் (3804), தட்டச்சர் (2200, 4200, 3834, 3844, 3852), சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III (2300, 4300, 3837, 3838, 3845), Personal Clerk (3841), Shorthand Typist (3853), Telephone Operator (3822), கூட்டுறவுச் சங்கங்களின் இளநிலை ஆய்வாளர் (1095), Record Clerk (3839)	18	**35** (அறிவிக்கை: 30)	**37#** (அறிவிக்கை: 32#)	**40#** (அறிவிக்கை: 35#)
தட்டச்சர் (3846), சுருக்கெழுத்துத் தட்டச்சர் (3847) – தமிழ்நாடு வக்ஃப் வாரியம் (இஸ்லாமியர் மட்டும்)	18	**35** (அறிவிக்கை: 30)	BCM மட்டும்: **37#** (அறிவிக்கை: 32#)	–
இளநிலை உதவியாளர் (3521, 3788, 3816, 3520, 3321, 3848), தட்டச்சர் (3817), சுருக்கெழுத்துத் தட்டச்சர் (3672), Senior Laboratory Assistant (3746), Laboratory Assistant (3103), Sales Assistant (3806)	18	**35** (அறிவிக்கை: 30)	அதிகபட்ச வயது வரம்பு இல்லை	அதிகபட்ச வயது வரம்பு இல்லை
செயல் அலுவலர் நிலை IV (1655) – இந்து சமய அறநிலையத் துறை	25	**40** (அறிவிக்கை: 35)	BC(OBCM), MBC/DC: **42#** (அறிவிக்கை: 37#)	**45#** (அறிவிக்கை: 40#)

வனக் காவலர் (3319), ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக் காப்பாளர் (3318)	21	**35** (அறிவிக்கை: 30)	**38** (அறிவிக்கை: 33)	**40** (அறிவிக்கை: 35)

- **#** – குறைந்தபட்சக் கல்வித் தகுதியை விட உயர்ந்த பொதுக் கல்வித் தகுதி பெற்ற BC(OBCM), BCM, MBC/DC, SC, SC(A), ST பிரிவினருக்கு அதிகபட்ச வயது வரம்பு இல்லை. "அதிகபட்ச வயது வரம்பு இல்லை" என்றால் 01-07-2026 அன்றோ தேர்வு / நியமனத்தின்போதோ 60 வயது நிறைவடைந்திருக்கக் கூடாது.
- மாற்றுத்திறனாளிகள், முன்னாள் படைவீரர்கள், ஆதரவற்ற விதவையருக்கான பிற வயதுச் சலுகைகள் அறிவிக்கையின்படி தொடரும்; துல்லியமான திருத்திய எண்ணிக்கைகளுக்குப் பிற்சேர்க்கை 11B/2026 பார்க்கவும் (ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக் காப்பாளர், வனக் காவலர் பதவிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பிக்க இயலாது).
- பிற வகுப்பினரில் மத்திய / மாநில அரசுப் பணியில் 5 ஆண்டு அல்லது அதற்கு மேல் பணியாற்றியவர்கள் வயது வரம்புக்குள் இருந்தாலும் விண்ணப்பிக்க இயலாது. இந்து சமய அறநிலையத் துறைப் பதவிகளுக்கு இந்து சமயத்தவர் மட்டும்; வக்ஃப் வாரியத் தட்டச்சர் (3846), சுருக்கெழுத்துத் தட்டச்சர் (3847) பதவிகளுக்கு இஸ்லாமியர் மட்டும்.
- உங்கள் பதவிக்கான சரியான வரம்பை அறிவிக்கையின் பத்தி 4.1 அட்டவணையிலும் பிற்சேர்க்கை 11B/2026-இலும் (tnpsc.gov.in) உறுதி செய்யவும்.

தேர்வு முறை (Exam Pattern)

ஒரே நிலை எழுத்துத் தேர்வு (Single stage) – ஒரே தாள், OMR, கொள்குறி வகை (Objective), 3 மணி நேரம், SSLC தரம். **நேர்முகத் தேர்வு இல்லை.** தரவரிசை எழுத்துத் தேர்வின் மொத்த மதிப்பெண் அடிப்படையில்.

பகுதி	பாடம்	வினாக்கள்	மதிப்பெண்
A	தமிழ்த் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு (Tamil Eligibility-cum-Scoring Test)	100	150
B	பொது அறிவு (General Studies)	75	150 (B + C)
C	திறனறிவு & மனத்திறன் (Aptitude and Mental Ability)	25	
மொத்தம்		**200**	**300**

- குறைந்தபட்சத் தகுதி மதிப்பெண்: **90 / 300** (அனைத்துப் பிரிவினருக்கும்).
- பகுதி A-இல் குறைந்தது **40% (60 மதிப்பெண்)** பெற்றால் மட்டுமே பகுதி B, C திருத்தப்படும்; A + B + C மொத்த மதிப்பெண் தரவரிசைக்குக் கணக்கிடப்படும்.
- பகுதி A வினாக்கள் தமிழில் மட்டும்; பகுதி B, C தமிழ், ஆங்கிலம் இரண்டிலும்.
- வாரியம் / பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பாடம் மட்டும் படித்த மாற்றுத்திறனாளித் தேர்வர்கள் பகுதி A-க்குப் பதிலாகப் பொது ஆங்கிலம் (SSLC தரம், மொழிபெயர்ப்புப் பகுதி இல்லை) தேர்ந்தெடுக்கலாம்; அதிலும் குறைந்தது 60 மதிப்பெண் தேவை.

பாடத்திட்டம் – அலகு வாரியான வினா எண்ணிக்கை

வினா எண்ணிக்கை TNPSC கூறியபடி உத்தேசமானது; சிறிது மாறலாம். அலகு வாரியான முழுப் பாடத்திட்டம்: TNPSC குரூப் 4 பாடத்திட்டம்.

பகுதி A – பொதுத் தமிழ் (அலகு)	உத்தேச வினாக்கள்
இலக்கணம்	25
சொல்லகராதி	15
எழுதும் திறன்	15
கலைச் சொற்கள்	10
வாசித்தல் – புரிந்து கொள்ளும் திறன்	15
எளிய மொழி பெயர்ப்பு	5
இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும்	15

அலகு	பகுதி B – பொது அறிவு	உத்தேச வினாக்கள்
I	பொது அறிவியல்	5
II	புவியியல்	5
III	இந்தியாவின் வரலாறு, பண்பாடு மற்றும் இந்திய தேசிய இயக்கம்	10
IV	இந்திய ஆட்சியியல்	15
V	இந்தியப் பொருளாதாரம் மற்றும் தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம்	20
VI	தமிழ்நாட்டின் வரலாறு, பண்பாடு, மரபு மற்றும் சமூக – அரசியல் இயக்கங்கள்	20
–	பகுதி C – திறனறிவு (15) + காரணவியல் (10)	25

தேர்ந்தெடுக்கும் முறை (Selection Process)

1. **எழுத்துத் தேர்வு** – மொத்த மதிப்பெண் அடிப்படையில் தரவரிசை. சம மதிப்பெண் எனில் உயர் கல்வித் தகுதி (தட்டச்சர் / Steno பதவிகளுக்கு முதலில் உயர் தொழில்நுட்பத் தகுதி), பின்னர் வயதில் மூத்தவர், பின்னர் முன்னதாக விண்ணப்பித்தவர் முன்னிலை பெறுவர்.
2. **இணையவழிச் சான்றிதழ் சரிபார்ப்பு (Onscreen Certificate Verification)** – VAO, இளநிலை உதவியாளர், தட்டச்சர், Steno Typist பதவிகளுக்குப் பொதுப் பிரிவில் 1:3, இடஒதுக்கீட்டுப் பிரிவுகளில் 1:2; வனக் காப்பாளர், வனக் காவலர் பதவிகளுக்கு அனைத்துப் பிரிவிலும் 1:6 விகிதத்தில் அழைப்பு. சான்றிதழ்களைப் பதிவேற்ற 10 நாட்கள் (calendar days) வழங்கப்படும்.
3. **வனப் பதவிகள் மட்டும்:** உடல் தகுதித் தேர்வு (Physical Standards Test) மற்றும் நடைத் தாங்குதிறன் தேர்வு (Endurance Test) – 1:3 விகிதம்; ஆண்கள் 25 கி.மீ., பெண்கள் / மூன்றாம் பாலினத்தவர் 16 கி.மீ. நடையை 4 மணி நேரத்தில் முடிக்க வேண்டும்; சென்னையில்

மட்டும் நடைபெறும். குறைந்தபட்ச உயரம்: ஆண்கள் 163 செ.மீ. (ST – 152), பெண்கள் / மூன்றாம் பாலினத்தவர் 150 செ.மீ. (ST – 145).

4. **நேரடிச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு (Counselling)** – தரவரிசைப்படி கலந்தாய்வில் பங்கேற்கலாம்.

கட்டணம் (Fee)

- ஒருமுறைப் பதிவு (OTR): ₹150 (பதிவு செய்த நாளிலிருந்து 5 ஆண்டுகள் செல்லும்; ஏற்கனவே செல்லுபடியான OTR இருந்தால் மீண்டும் தேவையில்லை).
- தேர்வுக் கட்டணம்: **₹100** – இணையவழியில் மட்டும் (Net Banking / Credit / Debit card / UPI); சேவைக் கட்டணம் தனி.
- கட்டண விலக்கு: SC, SC(A), ST, மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்ற விதவையர் – முழு விலக்கு; BC(OBCM), BCM, MBC/DC – மூன்று இலவச வாய்ப்புகள்; முன்னாள் படைவீரர்கள் – இரண்டு இலவச வாய்ப்புகள்.
- தமிழ் வழியில் படித்தோருக்கான முன்னுரிமை (PSTM) 2010 சட்டம், 2026 திருத்தச் சட்டம் எண் 12-இன்படி பொருந்தும்.

விண்ணப்பிக்கும் முறை (How to Apply)

1. **tnpscexams.in** இணையதளத்தில் மட்டுமே இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
2. முதலில் ஒருமுறைப் பதிவு (OTR) – ஆதார் இணைப்பு கட்டாயம்; செயலில் உள்ள மின்னஞ்சல், கைபேசி எண் தேவை.
3. OTR பயனர் பெயர் / கடவுச்சொல்லுடன் உள்நுழைந்து குரூப் 4 தேர்வுக்கு "APPLY" – அறிவிக்கை நாளன்று அல்லது அதற்குப் பின் ஸ்டுடியோவில் எடுத்த புகைப்படம் (20–50 KB, பெயர் மற்றும் எடுத்த தேதி அச்சிட்டது), கையொப்பம் (10–20 KB) பதிவேற்றம்.
4. இரண்டு தேர்வு மையங்களை விருப்பமாகத் தேர்வு செய்யலாம் (மாற்றுத்திறனாளிகள் ஒன்று மட்டும்). வனக் காப்பாளர் / வனக் காவலர் பதவிகளுக்கும் பரிசீலிக்க விரும்பினால் "All the Posts" தேர்வு செய்யவும்; இல்லையெனில் "Posts other than Forest Guard with Driving Licence / Forest Watcher".
5. கட்டணம் செலுத்தி "SUBMIT" செய்த பின் Application Number வரும்; அதைக் குறித்து வைத்துக் கொள்ளவும். திருத்தம் தேவையெனில் TNPSC அறிவிக்கும் திருத்தச் சாளரத்தில் மட்டும் (09-11-2026 முதல் 11-11-2026 வரை).

உதவி: TNPSC கட்டணமில்லா எண் 1800 419 0958 (வேலை நாட்களில் காலை 10.00 – மாலை 5.45); OTR / விண்ணப்பம் தொடர்பாக helpdesk@tnpscexams.in.

உத்தேச விடைக்குறிப்பு (Answer Key)

தேர்வு நாள் (10-01-2027) மாலை எங்கள் ஆசிரியர்கள் தயாரிக்கும் விடைக்குறிப்பு விடைக்குறிப்புப் பக்கத்தில் வெளியாகும். TNPSC-இன் அதிகாரப்பூர்வ உத்தேச விடைக்குறிப்பு 6 வேலை நாட்களுக்குள் வரும்; அதை எதிர்த்து 7 நாட்களுக்குள் இணையவழியில் மட்டும் முறையிடலாம்.

தயாரிப்புக்கு உதவும் எங்கள் பக்கங்கள்

- TNPSC குரூப் 4 பாடத்திட்டம் (அலகு வாரியாக)
- திருக்குறள் – பாடத்திட்டத்திலுள்ள 20 அதிகாரங்கள் (எளிய பொருளுடன்)
- TNPSC தேர்வு அட்டவணை (Exam Calendar)
- TNPSC குரூப் 4 பயிற்சி வகுப்பு
- பொதுத் தமிழ் இலவச வினாடி வினா
- உங்களுக்கான தனிப் படிப்புத் திட்டம் (இலவசம்)

- TNPSC குறிப்புகள்

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

TNPSC குரூப் 4 2026 விண்ணப்பிக்கக் கடைசி நாள் எது?

அறிவிக்கை 11/2026-க்கு இணையவழியில் விண்ணப்பிக்கவும் கட்டணம் செலுத்தவும் கடைசி நாள் 08-11-2026 இரவு 11.59 (முன்பு 05-11-2026). வயது உச்ச வரம்பு உயர்த்தப்பட்டதால் TNPSC நீட்டித்தது (பத்திரிகைச் செய்தி எண் 127/2026, 04-11-2026). விண்ணப்பம் tnpscexams.in தளத்தில் மட்டும்.

குரூப் 4 வயது வரம்பு உயர்த்தப்பட்டுள்ளதா?

ஆம். அரசாணை (நிலை) எண் 68 (30-10-2026) மூலம் அனைத்துப் பிரிவினருக்கும் அதிகபட்ச வயது வரம்பு 5 ஆண்டுகள் உயர்த்தப்பட்டது. 01-07-2026 அன்று பெரும்பாலான பதவிகளுக்கு: பிற வகுப்பினர் 35, BC(OBCM) / BCM / MBC/DC 37, SC / SC(A) / ST 40; VAO – பிற வகுப்பினர் 35, இடஒதுக்கீட்டுப் பிரிவினர் 45. குறைந்தபட்ச வயது மாறவில்லை. பதவி வாரியான அட்டவணை இந்தப் பக்கத்தில் உள்ளது.

குரூப் 4 தேர்வுத் தேதி மாறியதா?

இல்லை. எழுத்துத் தேர்வு 10-01-2027 (ஞாயிறு) காலை 9.30 – 12.30.

குரூப் 4 விண்ணப்பத்தில் திருத்தம் எப்போது செய்யலாம்?

TNPSC அறிவிக்கும் விண்ணப்பத் திருத்தச் சாளரத்தில் மட்டும். திருத்தச் சாளரம்: 09-11-2026 முதல் 11-11-2026 வரை (TNPSC பத்திரிகைச் செய்தி 127/2026).

Shanmugam IAS Academy – அடுத்த படி

- **வகுப்புகள்:** TNPSC குரூப் 1, 2 / 2A (Prelims + Mains), குரூப் 4, UPSC / IAS, வங்கி, SSC, SI – கோவை · மதுரை · ஆன்லைன் – https://www.shanmugamiasacademy.in/fees
- **நூல்கள் (PDF):** TNPSC PYQ நூல்கள், பொதுத் தமிழ் முழுமையான நூல், UPSC நூல்கள் – https://www.shanmugamiasacademy.in/study-materials
- **மேலும் இலவச PDF:** https://www.shanmugamiasacademy.in/free-pdf-download · இந்தப் பக்கம்: https://www.shanmugamiasacademy.in/tnpsc-group-4

சேர்க்கைக்கு அழைக்க / WhatsApp: 99941 46662 · 99944 27714 · www.shanmugamiasacademy.in